செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-51 மார்ச், 2025

அனைத்துலக

மகளிர் தின புரட்சிகர வாழ்த்துக்கள்

வங்கிக் கிளைகளில் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்பிடக் கோரி மார்ச் 24 மற்றும் 25, 2025 இரண்டு நாட்கள் நாடு தழுவிய வங்கி வேலை நிறுத்தம்

பல வங்கிக் கிளைகளில் ஊழியர்கள் பற்றாக்குறை கடுமையாக இருப்பதால், வங்கிகளில் போதுமான ஊழியர்களை தாமதிக்காமல் உடனடியாக நியமனம் செய்திடக்கோரி நாடு தழுவிய போராட்டத் திட்டங்களை வங்கித் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பினைச் சார்ந்த அனைத்து சங்கங்களும் முடிவு செய்துள்ளன.



வங்கிகளில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிடவும், வாரத்தில் ஐந்து நாள் வங்கிப்பணி உட்பட, வங்கி ஊழியர்களின் நிலுவையில் உள்ள தீர்க்கப்படாத முக்கிய கோரிக்கைகளை உடனடியாக தீர்த்திடவும் வலியுறுத்தி 2025 மார்ச் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் வங்கி ஊழியர் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கும் 48 மணி நேர இரண்டு நாட்கள் தொடர் நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டம் அனுசரிக்க வங்கித் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு (UFBU) அறைகூவல் விடுத்துள்ளது.

வங்கிக் கிளைகளில் ஊழியர் பற்றாக்குறை காரணமாக வேலைப்பளு அதிகரித்து அதன் விளைவாக வாடிக்கையாளர் சேவை பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள நிலையில், பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் போராட்டங்களை நடத்திட UFBU முடிவு செய்துள்ளது.



கோரிக்கைகள்

- *அனைத்து வங்கிகளிலும் தேவையான பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்திட வேண்டும். வங்கிக் கிளைகளில் பணிபுரியும் தற்காலிக ஊழியர்களை பணி நிரந்தரம் செய்திட வேண்டும்.*
- *வங்கிகளில் வாரத்திற்கு **5** நாட்கள் வேலைத் திட்டத்தினை உடனே அமல்படுத்த வேண்டும்.*
- *வேலைப் பாதுகாப்பை அச்சுறுத்தும் வகையில், ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளிடையே பிரிவினை மற்றும் பாகுபாட்டை உருவாக்கும், ஒப்பந்தங்களை மீறும் வகையிலான செயல்திறன் மதிப்பாய்வு மற்றும் **PLI** தொடர்பான (**PERFORMANCE REVIEW AND PLI**) சமீபத்திய **DFS** உத்தரவுகளை உடனடியாக திரும்பப் பெற்று பொதுத்துறை வங்கிகளின் சுயாட்சியை உறுதி செய்திட வேண்டும்.*
- *வங்கிக் கிளைகளில் அதிகாரிகள் மற்றும் ஊழியர் மீதான தாக்குதல்களை தடுத்து அவர்களுடைய பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும்.*
- *பொதுத்துறை வங்கிகளில் ஊழியர்/அதிகாரிகள் இயக்குநர் பதவிகளை நிரப்பிட வேண்டும்.*
- *நிலுவையில் உள்ள **IBA**வால் தீர்க்கப்படாத கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டும்.*
- *அரசு ஊழியர்களுக்கு உள்ளது போல் வங்கி ஊழியருக்கும் பணிக்கொடை உச்சவரம்பை ரூ.**25** லட்சமாக உயர்த்தி அதற்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்க (**GRATUITY ACT**) சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும்.*

- *ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு சலுகை வட்டி அடிப்படையில் வழங்கப்படும நலப் பலன்களுக்கு வருமான வரி விதிப்பதை நீக்கி, அதனை நிர்வாகங்களே ஏற்க வேண்டும்.*
- ***IDBI** வங்கியில் குறைந்தபட்சம் **51** % பங்கு மூலதனம் அரசின் வசம் இருக்க வேண்டும்.*



- *இருதரப்பு ஒப்பந்த விதிகளுக்கு மாறாக, ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் சேவை நிலைமைகளைப் பாதிக்கும் **DFS**ன் மேலாண்மை நிறுத்தப்பட வேண்டும்.*
- *வங்கிகளில் நிரந்தர வேலைகளை **OUTSOURCING** செய்வதை நிறுத்திட வேண்டும்.*
- *வங்கி நிர்வாகங்களின் நியாயத்திற்கு புறம்பான தொழிலாளர் விரோத நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டும்.*

போராட்ட விபரம் (மார்ச் மாதம்)

03-03-2025	**புது டில்லியில் பாராளுமன்றம் முன்பு தர்ணா போராட்டம் மற்றும் ஒன்றிய நிதி அமைச்சரிடம் கோரிக்கை மனு அளித்தல்**
07-03-2025	**அனைத்து மையங்களிலும் மாலை நேர ஒருமித்த ஆர்ப்பாட்டங்கள்**
11-03-2025	**அனைத்து வங்கி CORPORATE /HEAD OFFICE /ZONAL/ REGIONAL அலுவலகங்கள் முன்பாக அந்தந்த வங்கிச் சங்கங்களின் ஆர்ப்பாட்டங்கள்**
17-03-2025	**மாநிலத் தலைநகரங்களில் போராட்டம் குறித்த பத்திரிகையாளர் சந்திப்பு**
21-03-2025	**அனைத்து மையங்களிலும் மாலை நேர பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம்**
22-03-2025	**நமது கோரிக்கைகளை விளக்கி சமூக வலைத்தளப் பிரச்சாரம்**
24 & 25-03-2025	**நாடு தழுவிய இரண்டுநாள் 48 மணி நேர தொடர் வேலை நிறுத்தம்**

பெருந்திரள் ஆர்ப்பாட்டங்களில் மாநிலமெங்கும் ஏராளமானோர் பங்கேற்பு:

மாநிலத்தின் பல்வேறு மாவட்ட தலைநகரங்களில் கடந்த **14-02-2025** மற்றும் **21-02-2025** அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிகளில் ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

போராட்டத்தின் அடுத்த கட்டமாக **03-03-2025** அன்று புது டில்லியில் பாராளுமன்றம் முன்பாக வங்கி ஊழியர்களின் மாபெரும் தர்ணா போராட்டம் நடைபெற உள்ளது.

மாநிலமெங்கும் **UFBU** அமைப்பின் சார்பாக நடைபெறும் அனைத்து போராட்டங்கள் மற்றும் இரண்டு நாட்கள் **24** மற்றும் **25-03-2025** நடைபெறும் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் நம் உறுப்பினர்கள் முழு அளவில் பங்கேற்று போராட்ட நடவடிக்கைகளை வெற்றிபெறச் செய்யுமாறு சம்மேளனம் கேட்டுக் கொள்கின்றது.

கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் இளம் தோழர்களுக்கான தொழிற்சங்கப் பயிலரங்கம் - தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் ஏற்பாடு

கூட்டுறவு வங்கிகளில் செயல்படும் நம் சங்கங்களைச் சார்ந்த இளம் தோழர்களுக்கான தொழிற்சங்க தலைமைத்துவத்திற்கான பயிற்சி முகாம் சென்னையில் கடந்த பிப்ரவரி மாதம் **18** மற்றும் **19**ம் நாட்களில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் சார்பில் நடைபெற்றது.



தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் இணைப்புச் சங்கங்களிலிருந்து மாநிலம் முழுவதிலிமிருந்தும் அறுபது தோழர்கள் தொழிற்சங்கப் பயிலரங்கில் கலந்துகொண்டனர்.

இப்பயிலரங்கை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் துவக்கி வைத்து அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வரலாறு மற்றும் அதன் மாபெரும் தலைவர்கள் குறித்து விரிவுரை ஆற்றினார்.

1946ம் ஆண்டு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் துவக்கப்பட்ட பின்னணியையும், அதனைத் தொடர்ந்து அனைத்து வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், கிராமிய வங்கிகள் மற்றும் அந்நிய நாட்டு வங்கிகளில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் கட்டமைக்கப்பட்ட வரலாற்றினை விளக்கினார்.

தோழர் பிரபாத்கர், தோழர் பர்வானா, தோழர் **N** சம்பத், தோழர் **C S** சுப்பிரமணியன், தோழர் **P** பாலகிருஷ்ணன், தோழர் **V P** ஸ்ரீநிவாசன் ஆகிய முன்னோடித் தலைவர்கள் நமது சங்கத்தை மாபெரும் சக்தியாக வளர்த்திட மேற்கொண்ட தியாகத்தினை தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் நினைவு கூர்ந்தார்.




தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் செயலாளர் தோழர் **S D** ஸ்ரீநிவாசன் அவர்கள் இந்திய வங்கித்துறை குறித்து விரிவாக உரையாற்றினார். இந்திய வங்கித் துறையைப் பாதுகாத்திட கடந்த **33** ஆண்டுகளில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் இதுகாறும் **53** முறை வேலைநிறுத்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்று கூறினார்.



ஊடகவியலாளர் தோழர் **D** லெனின் அவர்கள் உலகமயமாக்கலின் தீய விளைவுகள் குறித்தும், ஓய்வு பெற்ற துணைப் பதிவாளர் திரு **Dr** தியாகராஜன் அவர்கள் கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஒழுங்குவிதி முறைகள் பற்றியும், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் முன்னாள் நிர்வாக உறுப்பினரும், ஓய்வு பெற்ற கூடுதல் பதிவாளருமான திரு **K M** தமிழரசன் அவர்கள் கூட்டுறவு வங்கிகள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் வகுப்புகள் எடுத்தனர்.



அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **K V S** ரவிகுமார், தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் செயலாளர் தோழர் **A** சுப்பிரமணியன் ஆகியோர் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் பெற்றுள்ள சலுகைகள் மற்றும் ஊழியர்களுடைய உரிமைகள் பற்றி பயிலரங்க உரை நிகழ்த்தினர்.

தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **G** வைரப்பன் அவர்கள் உரையுடன் பயிலரங்கம் நிறைவடைந்தது. இப்பயிற்சி முகாம் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக பங்கேற்ற தோழர்கள் நமது மாநில சங்கத்திற்கு நன்றி தெரிவித்தனர்.

அகில இந்திய வங்கி நிதி வசூலிப்போர் சம்மேளனத்தின் 8வது மாநாடு

சென்னை – 16-02-2025

அகில இந்திய வங்கி நிதி வசூலிப்போர் சம்மேளனத்தின் எட்டாவது அனைத்திந்திய மாநாடு கடந்த **16-02-2025** அன்று சென்னையில் சிறப்புற நடைபெற்றது. பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஏராளமான வங்கி நிதி வசூலிப்போர் இம்மாநாட்டில் பங்கேற்று சிறப்பித்தனர்.

அகில இந்திய வங்கி நிதி வசூலிப்போர் சம்மேளனத்தின் தலைவர் தோழர் **J P** சர்மா தலைமையேற்ற இம்மாநாட்டினை, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் துவக்கி வைத்தார்.



தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் தன்னுடைய துவக்க உரையில் வங்கி நிதி வசூலிப்போர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளை சட்ட ரீதியாக தீர்த்துவைக்க அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை குறிப்பிட்டார்.

நமது சங்கம் தொடர்ந்த வழக்குகளின் விளைவாக, தினசரி வங்கி நிதி வசூலிப்போர் **(BANK DAILY DEPOSIT COLLECTORS)** அனைவரும் இந்தியத் தொழிற்தகராறு சட்டத்தின்படி "வங்கிப் பணியாளர்கள்" **(WORKMEN UNDER THE ID ACT)** என்று உச்சநீதிமன்றம் அளித்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை சுட்டிக்காட்டிய தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் பல்வேறு வங்கிகளில் இத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ள சூழலில், தினசரி வங்கி நிதி வசூலிப்போர் பிரச்சினைகளை வலியுறுத்தி விரைவில் மும்பையில் உள்ள **IBA** அலுவலகம் முன்பு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் தர்ணா போராட்டம் நடத்திட திட்டமிட்டுள்ளது என்று கூறினார்.

மாநாட்டில் முக்கிய விருந்தினராக தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.



தோழர் **E** அருணாசலம் அவர்கள் தனது உரையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக **CGIT** அளித்த தீர்ப்பின்படி வங்கி நிதி வசூலிப்போர் அனைவரும் பணியிலிருந்து விலகும்போது பணிக்கொடை சட்டத்தின்படி **(GRATUITY ACT)** பணிக்கொடை பெறத் தகுதியானவர்கள் என்ற தீர்ப்பினை பெற்றபோதும், வங்கி நிதி வசூலிப்போர் பணியிலிருந்து விலகிடும்போது அவர்களுக்கு உரிய பணிக்கொடையினை வழங்க தொழிலாளர் விரோத மனப்பான்மை கொண்ட சில வங்கி நிர்வாகங்கள் மறுப்பதை கண்டித்ததோடு, இப்போக்கினை எதிர்த்து தொடரப்படும் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு சம்மேளனம் துணை நிற்கும் என்று கூறினார்.

மாநாட்டில் சிறப்பு விருந்தினர்களாக தோழர் **S D** ஸ்ரீநிவாசன், இணைச் செயலாளர் **AIBEA**, தோழர் **K** ஸ்ரீகிருஷ்ணா, பொருளாளர், **AIBEA**, , தோழர் **A** சிதம்பரம், பொருளாளர், **TNBEF** ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.



மாநாட்டின் இறுதியில் தோழர் **S D** ஸ்ரீநிவாசன் அவர்கள் அகில இந்திய வங்கி நிதி வசூலிப்போர் சம்மேளனத்தின் தலைவராகவும், தோழர் **P** பொன்னுசாமி அவர்கள் பொதுச் செயலாளராகவும் தோழர் **U** அலெக்சாண்டர் அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். **AIBDCF** மாநாட்டில் தேர்வு செய்யப்பட புதிய நிர்வாகிகளை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வாழ்த்துகின்றது.

தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் 8வது மாநாடு
23-02-2025 – மாபெரும் வெற்றி

தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் எட்டாவது மாநாடு கடந்த **23-02-2025** அன்று தஞ்சை நகரில் சிறப்புற நடைபெற்றது. மாவட்டம் முழுவதிலிமிருந்தும் பெருவாரியான உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு மாநாட்டினை வெற்றிகரமாக்கினர்.

மாநாட்டினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் கொடியேற்றித் துவக்கி வைத்தார். தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **G** வைரப்பன் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் தனது சிறப்புரையில், வங்கிகளில் தேவையான ஊழியர் நியமனம் மற்றும் வாரத்தில் ஐந்து நாட்கள் வேலைத் திட்டம் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவித்துள்ள நாடு தழுவிய போராட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கினார். கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஓய்வூதியக் கோரிக்கையினை வென்றெடுக்க அனைத்துப் போராட்ட நடவடிக்கைகளிலும் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் உறுதுணையாக இருந்து போராடும் என்று கூறினார்.

தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **G** வைரப்பன் அவர்கள் தன்னுடைய வாழ்த்துரையில், தமிழகத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளின் தற்போதைய நிலைமை குறித்தும், அவற்றில் பணிபுரியும் ஊழியர்கள் நாள்தோறும் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மாநில சங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

மாநாட்டின் முடிவில் தோழர் **K** அன்பழகன் அவர்கள் கௌரவத் தலைவராகவும், தோழர் **R** வீரசேகரன் அவர்கள் தலைவராகவும், தோழர் **S** குமார் அவர்கள் பொதுச் செயலாளராகவும், தோழர் **K** கந்தவேல் அவர்கள் செயலாளராகவும், தோழர் **V** கார்த்திகேயன் அவர்கள்

பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வாழ்த்துகின்றது.

அனைத்துலக மகளிர் தினம் - 08 மார்ச் 2025
பாலின சமத்துவத்திற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவோம்

2025ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் தேதி 115வது சர்வதேச மகளிர் தினம் உலகெங்கும் அனுசரிக்கப்படுகின்றது. நமது சமூகத்தில் பெண்களின் நிலைமைகள் மற்றும் அன்றாடம் அவர்கள் சந்திக்கும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்த அக்கறையுடன் உலகம் முழுவதும் மகளிர் தினம் அனுசரிக்கப்படுகின்றது.

உலகில் தொழில்மயம் உருவான காலம் முதற்கொண்டே உழைக்கும் பெண்களுக்கான இயக்கமும் தொடங்கப்பட்டது. தொழிற்சாலைகளில், 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புலம்பெயர்ந்த பெண்கள் அதிக எண்ணிக்கையில் பணியமர்த்தப்பட்டனர். ஆனால் அவர்கள் அபாயகரமான பணிச்சூழலில் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர்களின் வேலை நேரம் நாளொன்றிற்கு சுமார் பதினாறு மணி நேரமாக இருந்த அக்காலத்தில், ஐந்து வயது முதல் 12-14 வயது வரையிலான இளம் பெண்கள் கூட வேலைக்குச் செல்ல நிர்பந்திக்கப்பட்டனர். மிகவும் ஆபத்தான பணியிட சூழலில் பணியாற்றிய அப்பெண்களின் ஊதியம் மிகவும் குறைவாக இருந்தது.



தொழிற்சங்கம் துவங்கும் உரிமை வேண்டி பெண் தொழிலாளர்களின் போராட்டங்கள்:

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இத்தகைய அவலமான பணி நிலைமைகளை எதிர்த்து பெண் தொழிலாளர்களின் போராட்டங்கள் மற்றும் வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை அதிகரித்தது.



தொழிற்சங்கம் துவங்கும் உரிமை மற்றும் நாளொன்றிற்கு பத்து மணி நேர வேலை ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி, 1908 ஆம் ஆண்டில், கடும் குளிரையும் பொருட்படுத்தாது நியூயார்க்கின் மன்ஹாட்டன் நகரில் ஆயத்த ஆடை தயாரிக்கும் நிறுவனத்தில் பணிபுரிந்த சுமார் 30,000 பெண்கள் பெரும் போராட்டத்தினை துவக்கினர். போராடிய பெண்கள் மீது இரக்கமற்ற முறையில் தடியடி மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு பலர் கொல்லப்பட்டனர். .

அதனைத் தொடர்ந்து தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் தப்பித்துச் செல்ல வெளியேறும் வசதியில்லாத நிலைமையினால் சுமார் 125 பெண் தொழிலாளர்கள் மாண்டனர். அதே காலகட்டத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வேண்டி இயக்கம் உலகம் முழுவதும் நடந்து கொண்டிருந்தது.

1910 ஆம் ஆண்டில், கோபன்ஹேகனில், சோசலிஸ்ட் பெண்களின் இரண்டாவது மாநாடு நடந்தது. அதில், தொழிற்சங்கத் தலைவர் தோழர் கிளாரா செட்கின், உழைக்கும் பெண்களின் போராட்டங்களை நினைவுகூரும் ஒரு நாளை "சர்வதேச உழைக்கும் பெண்கள் தினமாக" அனுசரிக்க அறைகூவல் விடுத்தார். அதனைத் தொடர்ந்து, மார்ச் 8ம் நாளன்று சர்வதேச மகளிர் தினமாக அனுசரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. துவக்கத்தில் சில நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் மகளிர் தினத்தை கொண்டாடத் தொடங்கினர்.



ஆனால் இன்று உலகெங்கிலும் அனைத்து நாடுகளிலும் சர்வதேச மகளிர் தினம் ஆண்டுதோறும் மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடப்படுகின்றது. மனிதகுல வளர்ச்சியில் பெண்களின் பிரிக்க முடியாத பங்கினை உலகிற்கு உணர்த்திடவும், பெண்கள் அனுபவிக்கும் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் அநீதிகளுக்கு எதிரான நமது போராட்டத்தைத் தொடர்ந்து தீவிரப்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கும் நாளாகவும் அனைத்துலக மகளிர் தினம் விளங்குகின்றது.

பெண்களை சிறுமைப்படுத்தி அடக்க முயலும் எந்தவொரு சமூகமும் முன்னேற முடியாது. ஆனால் இந்த நவீன காலத்திலும் பெண்கள் எல்லா விதமான சுரண்டல்களுக்கும் ஆட்படுத்தப்படுகின்றனர்.

முதலாளித்துவ சக்திகளின் உலக மயமாக்கல் கொள்கைகளின் தவிர்க்க முடியாத விளைவுகளால் பெண்கள் வணிகக் கண்ணோட்டத்தில் சிறுமைப் படுத்தப்படுகின்றனர். சமூகத்தில் பெண்களுக்கு உரிய உரிமை மறுக்கப்படுகிறது.

பெண்ணுரிமைகளை பேணிக்காக்க தொழிற்சங்கங்கள் உறுதி மிக்க போராட்ட நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடவேண்டியது அவசியம்:

♦ இன்று உலகில் உள்ள மூன்று பில்லியன் தொழிலாளர்களில் சுமார் 1.25 பில்லியன் தொழிலாளர்கள் பெண்கள், அதாவது 40% தொழிலாளர்கள் பெண்கள் ஆவர்.

♦ பெண் தொழிலாளர்கள் பெருமளவில் மிகக் குறைந்த ஊதியத்துடன் நாகரீகமற்ற வேலை நிலைமைகளில் ஒப்பந்த அடிப்படையில் அன்றாடப் பணிகளில் தள்ளப்படுகின்றனர். தொழிலாளர் உரிமைகளுக்கு எதிரான, குறைந்த ஊதியம் மற்றும் பாதுகாப்பற்ற மோசமான பணி நிலைமைகளின் கீழ் அவர்கள் தாக்குதலுக்கு ஆளாகின்றனர்.



♦ உலகில் நாள்தோறும் வறுமையில் உழலும் தொழிலாளர்களில் 60 சதவீதம் பேர் பெண் தொழிலாளராக உள்ளனர்.

♦ சுமார் எண்பது மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் வேலையில்லாமல் உள்ளனர். அவர்கள் பெரும்பாலும் விவசாயம், சேவைத் துறை மற்றும் முறைசாரா துறை போன்ற குறைந்த ஊதியத்தில் பணியாற்றும் சூழலுக்கு தள்ளப்படுகின்றனர்.

♦ ஒரே விதமான பணிகளுக்கு ஆண்களை விட குறைந்த சம்பளம் வழங்கப்பட்டு பெண்கள் கடுமையான பாகுபாட்டிற்கு ஆளாகிறார்கள். உலகளவில், ஆண்களை விட பெண்கள் இருபது முதல் முப்பது சதவீதம் குறைவான ஊதியம் பெறுகின்றனர்.

♦ அதிக எண்ணிக்கையிலான பணிபுரியும் பெண்களுக்கு மகப்பேறு பாதுகாப்பு உத்தரவாதம் அரிதாகவே அளிக்கப்படுகிறது, மேலும் கர்ப்பமாக இருக்கும் பணிபுரியும் பெண்கள், தங்கள் வேலையை இழக்கும் அச்சுறுத்தல், இடைநிறுத்தப்படும் வருமானம் மற்றும் அதிகப்படியான வேலை பளுவின் காரணமாக ஏராளமான உடல்நல அபாயங்களை எதிர்கொள்கின்றனர்.



♦ பெண்கள் அதிகளவில் சட்டரீதியாகவும், சட்ட விரோதமாகவும் சிறந்த வேலைவாய்ப்பைத் தேடி இடம் பெயரும் நிர்பந்தத்திற்கு ஆளாகின்றனர்.

உலகளாவிய அளவில் புலம் பெயர்ந்து குடியேறியவர்களில் சுமார் ஐம்பது சதவீதம் பேர் பெண்களாகவே உள்ளனர். பணிபுரியும் இடங்களில் சுரண்டல் மற்றும் முறைகேடாக நடத்தப்படும் பாதிப்புகளுக்கு உள்ளாகி உழைக்கும் பெண் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

பெண்களின் உரிமைகள் மனித உரிமையாக நிலைநாட்டப்பட வேண்டும். பெண்களின் உரிமைகள் நிலைநிறுத்தப்படுவதை உறுதி செய்வது ஒவ்வொருவரின், ஒவ்வொரு சமூகத்தின் மற்றும் ஒவ்வொரு தேசத்தின் அடிப்படைக் கடமையாகும்.



பொதுவாகப் பெண்கள் பல வழிகளில் பாதிக்கப்படும் போதும், நியாயமான ஊதியம் வழங்காமை, பணியிடத்தில் துன்புறுத்தல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இல்லாமை, மகப்பேறு விடுப்புப் பலன்கள் மறுப்பு போன்ற எண்ணற்ற பிரச்சனைகளை பணிபுரியும் பெண்கள், எதிர்கொள்கின்றனர்.

உழைக்கும் பெண்கள் அனைவரும் முழுமையாக தொழிற்சங்க இயக்கங்களில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும், அதே சமயம், உழைக்கும் பெண்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் தொழிற்சங்கங்கள் உறுதி மிக்க போராட்ட நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுதல் அவசியமாகும். அனைவரும் ஒன்றிணைந்து பாலின சமத்துவத்திற்கான நடவடிக்கைகளை தாமதமின்றி துரிதப்படுத்த வேண்டும்.

நமது நாட்டில் வங்கித் துறையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பதாதையின்கீழ் பெண் ஊழியர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் பங்கேற்று வருவதை பெருமையாக கருதுகிறோம். கடந்த மாதம் அகமதாபாத் நகரில் நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 9வது தேசிய மகளிர் மாநாட்டின் முக்கியக் கோரிக்கையாக பணியிடங்களில் பெண் ஊழியர் பாதுகாப்பினை உறுதிப்படுத்திட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.



மேலும், பணியிடங்களில் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பாலின வன்முறைகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளைக் கோரியும், பாலின துன்புறுத்தல் கண்காணிக்கும் குழுவில் பெண் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்க வலியுறுத்தியும், அனைத்துலக மகளிர் தினமான மார்ச் 8ம் நாளினை விடுமுறையாக அறிவிக்க வேண்டியும், தொழிற்சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் பெண் தோழர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்குவதை உறுதிப்படுத்தவும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 9வது தேசிய மகளிர் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

DEARNESS ALLOWANCE FOR THE MONTHS OF
FEBRUARY, MARCH & APRIL 2025
FOR SERVING COMMERCIAL BANK EMPLOYEES

FOR SERVING EMPLOYEES – 21.20 % OF PAY

DA RATES FOR PENSIONERS – FROM FEBRUARY 2025
66 SLABS MORE

5th BPS	RETIRED PRIOR TO 01-01-1992 - 2220 SLABS OVER 600 POINTS		
	Up to 1250	1251-2000	Above 2000
	1487.40 % plus Rs 800	1487.40 % plus Rs 450	1487.40 %
6th BPS	RETIRED AFTER 01-11-1992 UPTO 31-03-1998 - 2083 SLABS OVER 1148 POINTS		
	Up to 2400	2401-3850	Above 3850
	729.05 % plus Rs 800	729.05 % plus Rs 450	729.05 %
7th BPS	RETIRED AFTER 01-04-1998 UPTO 31-10-2002 - 1949 SLABS OVER 1684 POINTS		
	Up to 3550	3551-5650	Above 5650
	467.76 % plus Rs 800	467.76 % plus Rs 450	467.76 %
8th BPS	RETIRED ON OR AFTER 01-11-2002 - 1798 SLABS OVER 2288 POINTS		
	FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 323.64 %		
9th BPS	RETIRED ON OR AFTER 01-11-2007 - 1661 SLABS OVER 2836 POINTS		
	FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 249.15 %		
10th BPS	RETIRED ON OR AFTER 01-11-2012 - 1260 SLABS OVER 4440 POINTS		
	FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 126.00 %		
11th BPS	RETIRED ON OR AFTER 01-11-2017 - 782 SLABS OVER 6352 POINTS		
	FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 54.74 %		
12th BPS	RETIRED ON OR AFTER 01-11-2022 – 1.37 POINTS OVER 123.03 POINTS		
	FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 21.20 %		

FOR CO-OP. BANKS WHICH ARE FOLLOWING 11TH BPS DA - 23 SLABS MORE

D.A. Rates @ 0.07% per slab for 782 Slabs over 6352 points: 54.74 %



